மூன்றும் நான்கும்

(திரிகடுகம், நான்மணிக் கடிகை)

உரை :
சிலம்பொலி சு. செல்லப்பன்,
எம். ஏ., பி. எல்., பி, டி..

பூம்புகார் பிரசுரம்
63, பிராட்வே
சென்னை 600 001

விளம்பிநாகனார்

இயற்றிய

நான்மணிக் கடிகை

கடவுள் வாழ்த்து

1. முழுமதி திருமாலின் ஒளிபொருந்திய முகத்தை ஒத்திருக்கும்; ஒளி பொருந்திய ஞாயிறு அவன் சக்கரத்தை ஒத்திருக்கும்; நீர்வளம் நிறைந்துள்ள வயல்களில் தண்டி லிருந்து மேலெழுகின்ற தாமரைப்பூ அவன் கண்ணை ஒத்திருக்கும்; காயா மரத்தின் புதிய மலர் அவன் நிறத்தை ஒத்திருக்கும்.

2. உலகத்தைத் தன் வயிற்றிலே அடக்கியவனும், எல்லா உலகங்களையும் மூன்றடியால் தாவிக் கடந்தவனும், (இந்திரன் பெருமழையைப் பெய்வித்த) அந்நாளில் பசுக் கூட்டங்களின் நடுக்கத்தைப் போக்கக் கோவர்த்தன மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்தவனும், வாணா சுரனது அழித்தற்கரிய நெருப்பு மதிலை அழித்த பெருமைக் குரியவனும் திருமால் ஆவான். (அன்னவன் திருவடிகளை வணங்குவோம்).

நூல்

3. எளியர் என்று எவரையும் எந்நாளும் இகழ வேண்டாம்; மிகச் சிறந்த ஒன்றைப் பெறுவதாகஇருந்தாலும் தான் கொள்ளத் தகுதியில்லாதவர்களுடைய கை மேலாகும் படியாகப் பெறவேண்டாம்; கிழ்மைக் குடியில் பிறந்தாரை அவர் செய்கை உள்ளத்தைச் சுடுகின்றதாக அமைந் தாலும் வெகுளவேண்டாம்; சொல்லத்தகாத சொற்களைப் பதட்டப்பட்டுச் சொல்ல வேண்டாம்.

4. பறையின் வல்லோசை தன் செவியிற் பட்டால் அசுணமா (என்ற பறவை) உயிர் வாழாது; (மானக் கேட்டால்) தம் உள்ளம் நிலைகுலையின் அறிவுடையோர் உயிர் வாழமாட்டார்; மரங்கள் நெருங்கிய காட்டிலுள்ள மூங்கில்கள் தம்மிடத்தே நெல் தோன்றியதும் அழியும்; தமக்குப் பொருந்தாத பழிச்சொல் நேரிட்டால் சான் றாண்மையுடைய பெரியோர் உயிர் வாழமாட்டார்.

நான்மணிக் கடிகை

கடவுள் வாழ்த்து

மதிமன்னு மாயவன் வாண்முகம் ஒக்கும்;
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்;
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்(று)அவன் கண்ஒக்கும்; பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம். 1

படியை மடிஅகத்(து) இட்டான்; அடியினால்
முக்கால் கடந்தான் முழுநிலம்;—அக்காலத்(து)
ஆப்பனி தாங்கிய குன்(று)எடுத்தான்; சோவின்
அருமை அழித்த மகன். 2

நூல்

எள்ளற்க என்றும் எளியாரென்(று); என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேற்பட;—உள்சுடினும்
சீறற்க சிற்றில் பிறந்தாரை; கூறற்க
கூறல் லவற்றை விரைந்து. 3

பறைபட வாழா அசுணமா; உள்ளம்
குறைபட வாழார் உரவோர்;—நிறைவனத்து
நெல்பட்ட கண்ணே வெதிர்சாம்; தனக்(கு)ஒவ்வாச்
சொல்பட வாழாதாம் சால்பு. 4

5. ஒன்பான் மணிகளின் இயல்புகளைக் கழுவியபின் அறியலாகும்; குதிரையின் ஓடுமியல்பை அதன்மேல் சேணத்தைப் பொருத்தி ஏறியபின் அறியலாகும்; பொன்னின் குணத்தைக் குற்றம் நீங்க உருக்கியபின் அறியலாகும்; உறவினரால் உண்டாகும் பயனை ஒருவன் தான் கேடுற்றுத் தாழ்ந்தபோது அறியலாகும்.

6. கள்ளி மர நடுவே (மணம் தரும்) அகிற்கட்டை தோன்றுகின்றது; மான் வயிற்றில் ஒளிபொருந்திய அரிதாரம் (என்ற அரிய மருந்து) உண்டாகிறது; பெரிய கடலின் ஆழத்தில் மிகவும் விலையுயர்ந்த முத்துக்கள் பிறக்கின்றன. (ஆதலால்) நன்மக்கள் தோன்றும் இடத்தை அறியவல்லவர் யார்? (எவராலும் அறிய முடியாது).

7. மலையில் ஒளி வீசுகின்ற மணிகள் தோன்றுகின்றன; காதலியின் சொற்களில் மிகுந்த மகிழ்ச்சி தோன்றுகிறது; மென்மையான அருளில் நல்ல அறநெறிகள் தோன்றுகின்றன; (இவ்வாறு ஒவ்வொன்றில் ஒவ்வொன்று மட்டுமே தோன்றுவதுபோல அல்லாமல்) செல்வத்தில் எல்லாமே தோன்றி விடுகின்றன.

8. தீமை இல்லாத நல்லொழுக்கம் செல்வத்தை ஒத்தது ஆகும்; (வாழ்வாங்கு வாழ்ந்து) முறைப்படி நடத்தல் சிறந்த அறச்செய்கையை ஒத்தது ஆகும்; (ஆராயாமல்) ஒருவனை நட்பாகக் கொண்டு பின்பு மாறுபட்டு ஒழுகுதல் ஒருவனைக் கொலை செய்த பழியை ஒத்தது ஆகும். தம்மை மதியாதாரிடத்தில் (பயன் கருதிச்) சென்று சேர்தல் மிகுந்த இழிசெயலை ஒத்தது ஆகும்.

9. திருடுவோம் என்று எண்ணியிருப்பார்க்கும் தூக்கம் இல்லை; காதலியிடம் விருப்பம் வைத்து (அவள் வரவை நோக்கியிருப்பார்க்கும்) தூக்கம் இல்லை; அரிய செல்வத்தைத் தேடுவோம் என்பார்க்கும் தூக்கம் இல்லை; தேடிய பொருளை வாளா பாதுகாப்போர்க்கும் தூக்கம் இல்லை.

மண்ணி அறிப மணிநலம்; பண்அமைத்(து)
ஏறிய பின்அறிப மாநலம்; மா(சு)அறச்
சுட்(டு)அறிப பொன்னின் நலம்காண்பார்; கெட்(டு)அறிப
கேளிரால் ஆய பயன். 5

கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும்; மான்வயிற்றில்
ஒள்அரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி? 6

கல்லில் பிறக்கும் கதிர்மணி; காதலி
சொல்லில் பிறக்கும் உயர்மதம்;—மெல்லென்
அருளில் பிறக்கும் அறநெறி; எல்லாம்
பொருளில் பிறந்து விடும். 7

திருஒக்கும் தீ(து)இல் ஒழுக்கம்; பெரிய
அறன்ஒக்கும் ஆற்றின் ஒழுகல்; பிறனைக்
கொலைஒக்கும் கொண்டுகண் மாறல்; புலைஒக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு. 8

கள்வம்என் பார்க்கும் துயில்இல்லை; காதலிமாட்(டு)
உள்ளம்வைப் பார்க்கும் துயில்இல்லை ஒண்பொருள்
செய்வம்என் பார்க்கும் துயில்இல்லை; அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில். 9

10. கற்றறிந்த பெரியோர்களிடம் தாம் இழந்துபோன பொருள்களுக்காக இரங்குகின்ற செயல் தோன்றாது; ஊக்கம் கொண்டு ஒரு செயலைச் செய்ய முயல்பவரிடம் துன்பச் சாயல் தோன்றாது; தீமையே செய்து ஒழுகுவாரிடம் (ஒரு பொழுதும்) அறச்செயல் தோன்றாது; வெகுளி யுள்ளவர்களிடம் எந்நன்மையுமே தோன்றாது எல்லாமே கெட்டழியும்.

11. வயலிற்கு அழகுஎன்று சிறப்பித்துச் சொல்லப் படுவது நெற்பயிரும் கரும்புமாகும்; குளத்திற்கு அழகு என்று குறிப்பிடப்படுவது தாமரைப்பூவாகும்; பெண்மைக்கு அழகுஎன்று சொல்லப்படுவது நாணும் இயல்பாகும்; (அவைபோல்) தனக்கு அழகாக விளங்குவது தான் செல்லும் வீட்டுலகத்திற்காக இம்மையிற் செய்யப்படும் அறங் களேயாம்.

12. யானையைக் கட்டுத்தறியிற் கட்டி வயப்படுத் துவர்; கொடிய நாகத்தை அதன் சீற்றம் நீங்கும்படி மந்திரத்தினால் கட்டுப்படுத்துவர்; கீழ்மக்களை அச்சுறுத்தி விலங்கிட்டுக் கட்டுப்படுத்துவர். (ஆனால்) சான்றோரை அன்பினாலேயே கட்டுப்படுத்தி விடலாம்.

13. பிறர் செய்த தீமைகளை உள்ளத்தில் கொள்ளாது நீக்க வேண்டும்; பிறர் செய்த நன்றியை மறந்துவிடாமல் நினைவில் கொள்ள வேண்டும்; எந்நாளும் தன் வெகுளியை நீக்க வேண்டும்; தன் உயர்வைக் கெடுக்கும் செயல்களை (எப்போதும்) ஒழிக்க வேண்டும்.

14. பாம்புகள் எல்லாம் தம் நச்சுப் பற்களினால் பிறருக்குத் துன்பம் செய்யும்; கொலை யானை தான் கொல்லக் கருதியவரைத் தன் கொம்புகளினால் குத்தித் துன்பம் செய்யும்; மகளிர் தம் காதலரோடு ஊடி முகக் குறிப்பால் துன்பம் செய்வர்; (அவைபோல) முனிவர்கள் (தம்மை இகழ்ந்தார்க்குத்) தம் தவ வலிமையால் துன்பத் தைத் தருவர்.

கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம்; காதலித்(து)ஒன்(று)
உற்றார்முன் தோன்றா உறாமுதல்;—தெற்றென
அல்ல புரிந்தார்க் (கு) அறம்தோன்றா; எல்லாம்
வெகுண்டார்முன் தோன்றாக் கெடும். 10

நிலத்துக்(கு) அணிஎன்ப நெல்லும் கரும்பும்;
குளத்துக்(கு) அணிஎன்ப தாமரை; பெண்மை
நலத்துக்(கு) அணிஎன்ப நாணம்; தனக்(கு)அணிஆம்
தான்செல் உலகத்(து) அறம். 11

கந்தில் பிணிப்பர் களிற்றை; கதம்தவிர
மந்திரத் தால்பிணிப்பர் மாநாகம்;—கொந்தி
இரும்பில் பிணிப்பர் கயத்தை;சான் றோரை
நயத்தில் பிணித்து விடல். 12

கன்றாமை வேண்டும் கடிய; பிறர்செய்த
நன்றியைக் கொல்லாக் கொளல்வேண்டும்;—என்றும்
விடல்வேண்டும் தன்கண் வெகுளி; அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை. 13

பல்லினால் நோய்செய்யும் பாம்(பு)எலாம்;—கொல்களிறு
கோட்டால்நோய் செய்யும் குறித்தாரை; ஊடி
முகத்தால்நோய் செய்வர் மகளிர்; முனிவர்
தவத்தால் தருகுவர் நோய். 14

15. முறையான இசைப்பண் அமையாத யாழ் ஓசையைவிட (காதுக்கு) வெறுப்பைத் தரும் பறைஒலியே சிறந்தது; பெருமை இல்லா ஆடவரைவிடக் கற்புடைப் பெண்டிரே சிறந்தவர்; இரந்து பெற்றுப் பெருமை கெட்டு உண்பதைவிடப் பசித்திருக்கும் துன்பமே சிறப்புடையது; தம்மிடம் அன்புடையவர்களைப் பிரிந்து வாழ்தலைவிடத் தீப்பாய்ந்து உயிர்விடுதலே சிறப்புடையது.

16. செல்வப் பாத்தியில் ஈகைப் பயிர் செழித்துவளரும்; இன்சொல் வயலில் சுற்றமாகிய பயிர் இனிதே நெருங்கி வளரும்; கண்ணோட்டம் இல்லாப் பள்ளத்தில் கடுஞ்சொல் லோடு கூடிய வஞ்சனைப் பயிர் வளரும்; வறுமையாகிய ஆழக் குழியுள் இரத்தலாகிய பயிர் மிக விரைவாக வளரும்.

17. (ஒருவன் தனக்கு) இழிவை விரும்புவானேல் இரத்தல் தொழிலை மேற்கொள்க; இவ்வுலகில் நிலைத்த பெயரை விரும்புவானேல் புகழை நிலைநிறுத்துக; தன்னொடு (மறுமைக்குத்) தொடர்ந்து வரக்கூடிய துணையை வேண்டுவானேல் அறச்செயல்களைச் செய்க; பிறரை வெற்றிகொள்ள விரும்புவானேல் வெகுளியைக் கைவிடுக.

18. மரக்கலம் உடைய மீகாமர் கடலின் ஆழமான நீரை ஊடறுத்துச் செல்வர்; (போர்முகத்தில் அஞ்சாமல்) பாய்கின்ற குதிரையை உடைய வீரன் பகைக் கடலைக் கலக்கி வெல்வான்; (ஐம்புலன்களில் செல்லாமல்) மனத் தினைத் தன்வயப்படுத்தியவன் தவக் கடலை நீந்திக் கடப்பான்; நூல்களை ஐயமறக் கற்று உணர்ந்தவன் அறிஞர்கள் கூடியுள்ள அவைக் கடலைக் கடந்து விடுவான்.

19. பொய் பேசுவதால் நட்பு முறிந்து முடிவை எய்தும்; இளமையின் அழகுநலம் உண்மையாகவே முதுமையைத் தனக்கு முடிவாகக் கொண்டிருப்பது ஆகும்; ஆராய்தல் இல்லாத செருக்கினால் செல்வங்கள் அழிவை எய்தும்; தத்தம் ஒழுக்கங்களை முடிவாகக் கொண்டிருப்பது உயிர் வாழ்க்கையாகும்.

பறைநன்று பண்அமையா யாழின்;—நிறைநின்ற
பெண்நன்று பீ(டு)இலா மாந்தரின்;—பண்அழிந்து
ஆர்தலின் நன்று பசித்தல்;—பசைந்தாரின்
தீர்தலின் தீப்புகுதல் நன்று. 15

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை; கிளைக்குழாம்
இன்சொல் குழியுள் இனி(து)எழூஉம்; வன்சொல்
கர(வு)எழூஉம் கண்இல் குழியுள்; இர(வு)எழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து. 16

இன்னாமை வேண்டின் இர(வு)எழுக; இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக;—தன்னொடு
செல்வது வேண்டின் அறம்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 17

கடல்குட்டம் போழ்வர் கலவர்; படைக்குட்டம்
பாய்மா உடையான் உடைக்கிற்கும்;—தோம்இல்
தவக்குட்டம் தன்உடையான் நீந்தும்; அவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும். 18

பொய்த்தல் இறுவாய நட்புக்கள்; மெய்த்தாக
மூத்தல் இறுவாய்த்(து) இளநலம்;—தூக்(கு)இல்
மிகுதி இறுவாய செல்வங்கள்; தத்தம்
தகுதி இறுவாய்த்(து) உயிர். 19

20. வீட்டிற்குச் சிறப்பு மாட்சிமையுடைய மகளிரைக் கொண்டிருத்தல்; ஒருவனுடைய செயலுக்குச் சிறப்பு அவன் செப்பமுடையவனாக இருத்தல்; நாட்டுக்குச் சிறப்பு, 'சின முடைய எங்கள் வெவ்வேல் அரசன் நல்லவன்' என்று (அவன்) குடிகளால் சொல்லப்படுதல்; ஒருவனுடைய கேட்டின் முழுப் பெருக்கம் சுற்றத்தாரை நீக்கி விடுதல்.

21. கொழுநன் நிலைகலங்கினால் பெண்மான் போன்ற வளாகிய அவன் மனைவியும் நிலைகலங்குவாள்; கற்றார்; மயங்கினால் அவர் கற்ற நூலின் கருத்துக்களும் மயங்கும்; ஆளப்படுகின்ற நாடு நெறிநில்லாது நடுங்குமானால் அரசன் கைக்கொண்ட செங்கோலும் நடுங்கும்; இசைமுறை கெடுமானால் பாடலும் கெட்டொழியும்.

22. மனைக்கு வறுமையாவது ஒளிபொருந்திய நெற்றியையுடைய மனைவி இல்லாதிருத்தல்; செல்லுகின்ற திக்குகளில் (உள்ள ஊர்களுக்குப்) பொலிவின்மையாவது அவ்விடங்களில் நட்பினர்கள் இல்லாதிருத்தல்; (பலரும் கூடியுள்ள) அவைக்குக் கெடுதியாவது அறிவால் மூத்த பெரியோர் இல்லாதிருத்தல்; தனக்கு அழிவாவது கல்வியறி வற்ற உடம்பினனாக இருத்தல்.

23. ஒற்றுமை இன்மை வலிமையைக் குறைக்கும் பொய்ம்மையான ஒழுக்கம் ஒருவனின் பொன்போன்ற மேனியை அழிக்கும்; ஊற்றி வைக்கப்பட்ட (தகுதியற்ற) கலம் பாலின் இனிய சுவையைக் கெடுக்கும்; இனமல்லாத இனத்தோடு நட்புச் செய்தல் பிறந்த குலத்தின் பெருமை யைக் குலைக்கும்.

24. பொய்யாமைப் பண்பு ஒருவனுக்குப் புகழைத் தேடித்தருவது ஆகும்; முறைபிறழ்ந்து ஒருவரையும் மதி யாமல் செயற்படுவது அறியாமையாகும்; பொருள்களின் உண்மைத் தன்மையைக் காணமுடியாத குருடனாகச் செய்வது கல்லாமையால் வரும் மயக்கமாகும்; மயக்கம் நீங்கிய கண்ணோட்டம் உடையவராகச் செய்யவல்லது நீதிநெறியாகும்.

மனைக்(கு)ஆக்கம் மாண்ட மகளிர்; ஒருவன்
வினைக்(கு) ஆக்கம் செவ்வியன் ஆதல்;—சினச்செவ்வேல்
நாட்(டு)ஆக்கம் நல்லன்இவ் வேந்(து)என்றல்;
கேட்டுஆக்கம்
கேளிர் ஒரீஇ விடல். 20

பெற்றான் அதிர்ப்பின் பிணைஅன்னாள் தான்அதிர்க்கும்;
கற்றான் அதிர்ப்பின் பொருள்அதிர்க்கும்;—பற்றிய
மண்அதிர்ப்பின் மன்னவன் கோல்அதிர்க்கும்;
பண்அதிர்ப்பின்
பாடல் அதிர்ந்து விடும். 21

மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை;தான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றறி(வு) இல்லா உடம்பு. 22

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை;—பெய்த
கலம்சிதைக்கும் பாலின் சுவையை; குலம்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின். 23

புகழ்செய்யும் பொய்யா விளக்கம்;—இகந்தொருவர்ப்
பேணாது செய்வது பேதைமை;—காணாக்
குருடராச் செய்வது மம்மர்;—இருள்தீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு. 24

25. பாகன் தோட்டியால் குத்தி வருத்தினாலும் யானை அவனைச் சுமந்து நிற்கும்; தாய் அடித்துத் துன்புறுத்தினாலும் குழந்தை "அம்மா" என்று அவள் பின்னே ஓடும்; நட்பினர் வெகுண்டு வினை செய்தாலும் அவர் நடுங்கும் செயலை நண்பர்கள் செய்யார்; பகைவர்கள் தம்முள் ஒன்றுகூடி வாழுகின்ற காலம் ஒருபோதும் இல்லை.

26. முகமலர்ச்சி நட்புக் கொண்டாரிடத்தே சிறக்கும்; சிறந்த அவையின் உயர்வு அன்பினால் விளங்கிச் சிறக்கும்; வேகம் நிறைந்த தேரின் பயன் ஓட்டுகின்ற பாகனால் பெருமை அடையும்; ஊரின் நன்மை ஒப்புரவுத் தன்மை உள்ள செல்வனால் நினைந்து செய்யப்படும்.

27. அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாது இருத்தலை ஒருவன் அஞ்சுவானாக; தனக்குத் தகுதியாய ஒழுக்கத்தில் தான் இறக்குந் துணையும் ஒருவன் தவறாது ஒழுகு வானாக; கோடிப்பொருள் (பெரும்பொருள்) பெறுவதா யினும் தன் மனம் அறிய ஒருவன் நடுநிலை தவறாதிருப் பானாக. நண்பரிடம் ஒப்புவித்த செயலை (ஐயுற்று) ஒருவன் ஆராயாதிருப்பானாக.

28. குடிமக்கள் எல்லாம் அரசனின் செங்கோலை நோக்கி இன்புற்று வாழ்வர்; குழந்தைகள் எல்லாம் தாயின் முலைப்பாலை நோக்கி உயிர் வாழும்; உலகத்து உயிர்கள் எல்லாம் மழைத்துளியை நோக்கி மகிழ்ந்து வாழும்; உலகத்து உயிர்களின் சாவை நோக்கிக் கூற்றுவன் இன்புறு வான்.

29. கற்பதனால் மிகுந்த அறியாமை கெட்டொழியும்; அறியாமை நீங்குவதனால் சிறுமைக் குணம் அழிந்து இவ்வுலக இயல்பு உணரப்படும்; உலக இயல்பை உணர்ந்தால் உணர்ந்தவன் உண்மை வழியில் செல்வான்; அந்த உண்மை வழியில் செல்பவன் இவ்வுலகில் புகழை நிலைபெறச் செய்து மறுமையில் உயர்ந்த வீட்டுலகில் புகுவான்.

மலைப்பினும் வாரணம் தாங்கும்; குழவி
அலைப்பினும் அன்னேஎன்(று) ஓடும்; சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யார்; ஒட்டார்
உடன்உறையும் காலமும் இல். 25

நகைநலம் நட்டார்கண் நந்தும்; சிறந்த
அவைநலம் அன்பின் விளங்கும்; விசைமாண்ட
தேர்நலம் பாகனால் பாடுஎய்தும்; ஊர்நலம்
உள்ளானால் உள்ளப் படும். 26

அஞ்சாமை அஞ்சுதி; ஒன்றில் தனக்குஒத்த
எஞ்சாமை எஞ்சல் அளவுஎல்லாம்;—நெஞ்(சு)அறியக்
கோடாமை கோடி பொருள்பெறினும்; நாடாதி
நட்டார்கண் விட்ட வினை. 27

கோல்நோக்கி வாழும் குடிஎல்லாம்; தாய்முலைப்
பால்நோக்கி வாழும் குழவிகள்;—வானத்
துளிநோக்கி வாழும் உலகம்; உலகின்
விளிநோக்கி இன்புறூஉம் கூற்று. 28

கற்பக் கழிமடம் அஃகும்; மடம்அஃகப்
புற்கம்தீர்ந்(து) இவ்வுலகின் கோள்உணரும்; கோள்
உணர்ந்தால்
தத்துவம் ஆன நெறிபடரும்; அந்நெறி
இப்பால் உலகின் இசைநிறீஇ—உப்பால்
உயர்ந்த உலகம் புகும். 29

30. தாழ்ந்த பள்ளத்தில் நீர் நிற்கும்; பல்லோரும் பழிக்கும் ஒருவனிடத்தில் பாவம் சேரும்; அடக்கித் தடுத் தாலும் காமம் மென்மேலும் மிகுந்து வளரும்; தனக்கு ஒரு துன்பம் வந்தபோது துணையாய் நிற்பது அறிவொன்றே யாகும்.

31. செல்வத்தைப்போல் வலிமையுடையது பிறி தில்லை; கல்வி கற்றலைப்போல ஒருவனுக்கு உற்ற துணை வேறு இல்லை; எல்லாவற்றுள்ளும் வறுமையைப்போலத் துன்பமானது வேறு எதுவுமில்லை. (இரப்போர்க்கு) இல்லை என்று சொல்லாத மனவளத்தைப்போல வளமையானது வேறு எதுவுமே இல்லை.

32. புகையை அடிப்படையாகக் கொண்டு பெரு நெருப்பு வெளிப்பட்டெரியும்; சிறந்த முகமலர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு மனத்திலுள்ள மகிழ்ச்சி வெளிப்போந்து இன்புறுத்தும்; ஒருவன் செய்த இன்னாச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு அவன் மனத்துள்ள பகைமை முளைவிட்டு வளரும்; அவ்வாறு முளைவிடும் பகைமை பின்னர் பல துன்பங்களுக்கு அடிப்படையாய் அமைந்துவிடும்.

33. (இல்லற வாழ்க்கையில்) பின்னர் வர இருப்பதைக் கருதிப் பாராத பெண்கள் (கொழுநனுக்கு) நோய் போன் றவர்;(எல்லா உயிர்களிடத்தும்)அன்புடைய மக்கள் உலகிற்கு அழகு போன்றவர்; சிற்றறிவினையுடைய ஆடவர் பூச்சி யரித்த பயிர் போன்றவர்; வலிமையான நெஞ்சினை உடை யவர் அசையாத பாறை போன்றவர்.

34. அந்தணர்ப் பிறப்பைக் காட்டிலும் உயர்ந்த பிறப்பு வேறு இல்லை; அடித்தாலும் அணைத்தாலும் தாயைவிடச் சிறந்த உறவு பிறிதில்லை;செல்வத்தோடு ஒப்புமை கொண்ட அழகு வேறு ஏதும் இல்லை; ஆராய்ந்து பார்த்தால் (ஊக்க முடைய) இளமைப் பருவத்தோடு ஒப்பாவது வேறு எதுவுமே இல்லை.

குழித்துழி நிற்பது நீர்;தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்;—அழித்துச்
செறுவுழி நிற்பது காமம்; தனக்குஒன்(று)
உறுவுழி நிற்பது அறிவு. 30

திருவின் திறல்உடைய(து) இல்லை;—ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறஇல்லை;—எற்றுள்ளும்
இன்மையின் இன்னாத(து) இல்லை; இலம்என்னும்
வன்மையின் வன்பாட்ட(து) இல். 31

புகைவித்தாப் பொங்குஅழல் தோன்றும்; சிறந்த
நகைவித்தாத் தோன்றும் உவகை;—பகைஒருவன்
முன்னம்வித் தாக முளைக்கும்; முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும். 32

பிணிஅன்னர் பின்நோக்காப் பெண்டிர்;உலகிற்(கு)
அணிஅன்னர் அன்புடை மாக்கள்;—பிணிபயிலும்
புல்அன்னர் புல்அறிவின் ஆடவர்;—கல்அன்னர்
வல்என்ற நெஞ்சத் தவர். 33

அந்தணரின் நல்ல பிறப்பில்லை; என்செயினும்
தாயின் சிறந்த தமர்இல்லை; யாதும்
வளமையோடு ஒக்கும் வனப்புஇல்லை; எண்ணின்
இளமையோடு ஒப்பதூஉம் இல். 34

35. இரும்பால் செயயப்பட்ட கருவிகளைக் கொண்டே இரும்பைத் துண்டிப்பர்; மிக்க சிறப்பினை உடைய நீராகாரம் உண்பவர் அந்நீராலேயே வாய் கழுவிக் கொள்வர்; ஆராயின் அடைதற்கரிய பொருளை அரிய முயற்சி செய்து (அறிவுடையோர்) அடைந்து விடுவர்; ஆதலின் பெரிய செயல்கள் பெரியோர்களாலேயே செய்யப் பெறும்.

36. வீரப் பெருமிதம் அரசர்களுக்கு முன்னால் (வீரர் களுக்குத்) தோன்றும்; சிறந்த அறமகிழ்வு வறுமையுடை யார்க்கு ஒன்றைக் கொடுக்கும் போது மலரும்; வியப்பின் பெருங்களிப்பு கிடைத்தற்கரிய ஒன்றை வறியவர் பெறும் போது உண்டாகும்; கீழ்களது மகிழ்ச்சி தான் வாழும் ஊரில் பலரும் அறிய ஆரவாரித்து அலறும்.

37. தீட்டிய கண் மையினால் மலர்போன்ற கண்கள் விளங்கி அழகு மிகும்; காரிருளில் எண்ணெயால் ஒளிவிளக்கு சுடர்விட்டு ஒளிரும்; மழை பொழிவதற்காக மேகங்கள் முழங்கும் ஒலிகேட்டுக் குருக்கத்தி இலைகள் தளிர்விடத் தொடங்கும்; அறிவுடை மேலோர்க்கு நட்டார் பொருள் வழங்குதலால் அம்மேலோர் மேலும் அறிவிற் பெருகுவர்.

38. நண்பர்கள் இடையில் மகிழ்ச்சியான உரையாடல் இன்பமானது; சேர்த்த பெருஞ்செல்வத்தை (வெறுப்பில் லாமல்) எடுத்து வழங்கல் இன்பமானது; கொண்ட கொழு நனைப் பேணி வழிபடும் சிறப்புடைய பெண் இனிமையுடை யவளாவாள்; பாட்டை உணரவல்லார் நடுவே பண்முறை இனிமை தரும்.

39. இரந்து வருவாரைக் கண்டு உள்ளதை இல்லை என்று ஒளிப்பவர்க்குப் பற்றுக்கோடு (அதாவது செய்யும் செயலாவது) முகம் கவிழ்தல்; எக்காலத்தும் இரப்பவர்க்குப் பற்றுக்கோடு யாதானும் ஒன்றைத் தரும் கொடையாளர்; பெரும்படைக்குப் பற்றுக்கோடு வீரம்; ஒருவருடைய உயிருக்குப் பற்றுக்கோடு ஊன் உண்ணாதிருத்தல்.

இரும்பின் இரும்பிடை போழ்ப;—பெருஞ்சிறப்பின்
நீர்உண்டார் நீரால்வாய் பூசுப;—தேரின்
அரிய அரியவற்றால் கொள்ப;—பெரிய
பெரியரால் எய்தப் படும். 35

மறக்களி மன்னர்முன் தோன்றும்; சிறந்த
அறக்களி இல்லாதார்க்(கு) ஈயும்முன் தோன்றும்;
வியக்களி நல்கூர்ந்தார் மேற்(று)ஆம்; கயக்களி
ஊரில் பிளிற்றி விடும். 36

மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள்; மால்இருள்
நெய்யால் தளிர்க்கும் நிமிர்சுடர்;—பெய்யல்
முழங்கத் தளிர்க்கும் குருகுஇலை; நட்டார்
வழங்கத் தளிர்க்குமாம் மேல். 37

நகைஇனிது நட்டார் நடுவண்; பொருளின்
தொகைஇனிது தொட்டு வழங்கின்;—தகையுடைய
பெண்இனிது பேணி வழிபடின்;—பண்இனிது
பாடல் உணர்வார் அகத்து. 38

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல்; எஞ்ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சார்ஒன்(று) ஈவார்;—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை; ஊனுண்டல்
செய்யாமை செல்சார் உயிர்க்கு. 39

40. கம்மியர் தம் கண்ணால் கண்டவண்ணமே பொருகள்ளைச் செய்வர்; ஐம்பொறிகளையும் வயப்படுத்தி ஆளும் திறமுடையவர் பயனுண்டு எனக் கேள்வியால் தெரிந்தவற்றையே செய்வர்; நற்குணங்கள் நிறைந்தவர் பிறர்க்கு இனிமையாயினவற்றையே செய்வர்; திருமகள் சினமில்லாதவர் கருதியவற்றையே செய்வாள்.

41. செல்வம் குல அடிப்படையில் ஒருவரிடம் சேர்ந் திருப்பதில்லை; பெருவலியை உடைய கூற்றுவனும் உயிர்கள் சொல்வதைக் கேட்டு அதன்படி நடந்து உயிரைக் கவரு வதில்லை; மிகவும் (முயன்று) மறைத்தாலும் காமம் வெளிப்படாமலிருப்பதில்லை; ஆட்சி முறையும் அரசனது தன்மைக் கேற்ப அமைந்துவிடும்.

42. உயிர்கள் எல்லாம் பிறக்கும்பொழுது பிறக்காதே என்று தடுத்தாலும் பிறக்காமலிருக்கப் போவதில்லை; அவை இறக்கும் பொழுது நில் என்று மறித்தாலும் நிற்கப் போவதில்லை; திருமகள் (மனமகிழ்ந்து) உடன்பட்டால் பல்வகைச் செல்வமும் தாமே பெருகும்; அத்திருமகள் நீங்கும் காலத்தில் கண்ணெதிரே காணப்பட்ட பொருள் களும் காணாமற் போய்விடும்.

43. போரில்லாவிடில் போர் மறவர் சிறப்புக் குன்றும்; நிலத்தில் இறங்கிய வேர் அறுபடுமாயின் மரங்கள் எல்லாம் உலரும்; மடையில் நீர் வற்றினால் நீண்ட நெய்தல் மலர்கள் வாடும்; படை குறைந்தால் அரசருடைய சிறப்பும் அற்றுப் போகும்.

44. அயலார் என்று சொல்லப்படுபவர் நட்புத் தன்மையில்லாதவர்; யாவர் மாட்டும் அன்புடையார் என்று சொல்லப்படுபவர் நடுவு நிலைமையாளர்; மேன்மைமிக்க தந்தை என்று சொல்லப்படுபவர் தன் ஆசிரியர்; ஒருவனுக்குத் தாய் என்று சொல்லப்படுவது முற்பிறப்பில் அவன் செய்த நல்வினை.

கண்டதே செய்பவாம் கம்மியர்; உண்டுஎனக்
கேட்டதே செய்ப புலன்ஆள்வார்;—வேட்ட
இனியவே செய்ப அமைந்தார்;—முனியாதார்
முன்னிய செய்யும் திரு. 40

திருவும் திணைவகையால் நில்லா;—பெருவலிக்
கூற்றமும் கூறுவ செய்துஉண்ணா(து);—ஆற்ற
மறைக்க மறையாதாம் காமம்;—முறையும்
இறைவகையால் நின்று விடும். 41

பிறக்குங்கால் பேர்எனவும் பேரா; இறக்குங்கால்
நில்எனவும் நில்லா உயிர்எனைத்தும்;—நல்லாள்
உடம்படின் தானே பெருகும்;—கெடும்பொழுதில்
கண்டனவும் காணாக் கெடும். 42

போர்அறின் வாடும் பொருநர்சீர்; கீழ்வீழ்ந்த
வேர்அறின் வாடும் மரம்எல்லாம்;—நீர்பாய்
மடைஅறின் நீள்நெய்தல் வாடும்; படைஅறின்
மன்னர்சீர் வாடி விடும். 43

ஏதிலார் என்பார் இயல்புஇல்லார்; யார்யார்க்கும்
காதலார் என்பார் தகவுடையார்;—மேதக்க
தந்தை எனப்படுவான் தன்உவாத்தி; தாய்என்பாள்
முந்துதான் செய்த வினை. 44

45. நாணம் நீங்கியபோதே ஒருவனது பொலிவும் அழியும்; நல்வழியிற் செல்லும் ஐம்பொறிகளால் தீவினை தானாகவே அழியும்; நீர் வற்றிப் போனால் பசிய பயிர் களின் நல்ல விளைவு கெடும்; நற்குணம் வேறுபட்டால் நண்பர்களின் நட்புக் கெட்டுப் போகும்.

46. நல்லவற்றை அறியமுடியாதாருக்குச் செய்த நன்றி கெடும்; (விருந்தோம்பும்) விருப்பமில்லாதவர் களிடம் சென்ற விருந்தினர் வாடுவர்; பண் இசையை அறியாதவர் முன்பு பண்ணோடு மிகப் பொருந்திய பாடற் சுவை பயனின்றிக் கெடும்; ஊடல் இனிமையை உணர முடியாதவரிடம் கொண்ட ஊடல் பயன்படாமல் அழியும்.

47. மலர் இருப்பதை அம்மலரின் மணம் அறிவிக்கும்; ஒருவனுடைய செய்கையின் நன்மையை அவன் சொன்ன சொல்லே காட்டி நிற்கும்; ஆராயுங்கால் நெஞ்சினுள் நிறைந்து கிடக்கும் தீமைகளை அவன் மனமே அவனுக்குச் சொல்லிவிடும்; ஒருவனுடைய நெஞ்சக் கருத்தை முற்படத் தெரிவிப்பது அவன் முகத்தைப்போல மற்றொன்று இல்லை.

48. மழையில்லாவிட்டால் உலக மக்கட்கு வாழ்வே இல்லை; அம்மழையோ தவம் செய்யாதவர் இருப்பிடங் களில் பெய்தல் இல்லை; அத்தவமும் செங்கோலரசன் இல்லாத இடத்தில் நிகழ்தல் இல்லை; அச்செங் கோலரசனோ நல்ல குடிமக்கள் இல்லாத இடத்தில் இருத்தல் இல்லை.

49. தொடுக்கப்பட்ட குளிர்ச்சி பொருந்திய பூமாலை தன்பூக்களால் பொலிவு பெறும்; அப்பூக்களின் தாதினால் வண்டுகள் எல்லாம் அம்மலர்களில் விரும்பி வந்து தங்கும்; குற்றமில்லாத நற்செயல்களால் மக்கள் உயர்வடைவர்; தத்தம் அரும்பின் வகைக் கேற்பத் தேன் மிகுந்து வழியும்.

பொறிகெடும் நாண்அற்ற போழ்தே;—நெறிபட்ட
ஐவரால் தானே வினைகெடும்;—பொய்யா
நலம்கெடும் நீர்அற்ற பைங்கூழ்;—நலம்மாறின்
நண்பினார் நண்பு கெடும். 45

நன்றிசாம் நன்(று)அறியா தார்முன்னர்;—சென்ற
விருந்தும் விருப்புஇலார் முன்சாம்;—அரும்புணர்ப்பின்
பாடல்சாம் பண்அறியா தார்முன்னர்;—ஊடல்சாம்
ஊடல் உணரார் அகத்து. 46

நாற்றம் உரைக்கும் மலர்உண்மை; கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம்; தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனம்உரைக்கும்; முன்னம்
முகம்போல முன்உரைப்ப(து) இல். 47

மழைஇன்றி மாநிலத்தார்க்கு இல்லை; மழையும்
தவம்இலார் இல்வழி இல்லை; தவமும்
அரசன் இலாவழி இல்லை; அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல். 48

போதினால் நந்தும் புனைதண்தார்; மற்றுஅதன்
தாதினால் நந்தும் சுரும்புஎல்லாம்;—தீ(து)இல்
வினையினால் நந்துவர் மக்களும்; தத்தம்
நனையினால் நந்தும் நறா. 49

50. பண்பிற் சிறந்திருப்பவர் பிறரிடம் கோபித்துக் கொள்ளுதல் அரிது; நற்குடியில் பிறந்தவர் எப்போதும் தம் இனத்தைத் துறந்து வாழ்தல் அரிது; எதையும் தனக் கென்றே வைத்துக் கொள்ளும் குறுகிய நோக்கமுடையவர் பிறர்க்குப் பகுத்தளித்து உண்ணுதல் அரிது; இரந்து வந்தவர் களுக்கு இல்லை என்று சொல்லுதல் ஈர நெஞ்சமுடைய எவர்க்கும் அரிது.

51. நோயினால் துன்புறும் உடலினுள் செல்வது நல்ல உணவென்றாலும் துன்பத்தைச் செய்யும்; அறிவிலா மக்களை அவர்களுடைய வாய்ச்சொல்லே துன்புறுத்தும்; நெறி கடந்து முற்பகல் ஒருவன் செய்த தீவினை பிற்பகல் வந்து வருத்தும்; (அறத்தின் வழியில் நில்லாத) அரசனை அவனைச் சேர்ந்த படைகளே கொல்லும்.

52. பிறரை இகழும் செயல் இகழத்தக்கது; ஒருவனை நண்பன் என்று கருதத்தகுவது அவன் சொல்லும் உறுதிச் சொல்; உள்ளத்தில் தெளிந்து அடையத்தக்கது அறவழி; பல நூல்களையும் ஆராய்ந்து கொள்ளத்தக்கது மெய்ப் பொருள்.

53. ஆற்று வெள்ளம் தம்முள் புகுந்தாலும் அடக்கிக் கொள்ளும் பெரிய குளங்கள் உள்ளன; எல்லாப் பெருமை களும் நிறைந்த சிறப்புடைய அரசர்களாலும் விரும்பப்படும் குடிகளும் உள்ளனர்; பழைய மரபினதாகிய வேதங்களின் கருத்துக்கள் பொருந்திய பாட்டுக்களும் உள்ளன; வேள்வி களுக்கு ஒப்பான கொடைகளும் உள்ளன.

54. உழவு மாடுகளை உடையவன் வேளாளன்; ஒரு காலால் பெடையை வயப்படுத்துவதான கோழியைப்போல நயமாகப் பிறரை வயப்படுத்தி எவரோடும் என்றும் மாறுபடாதிருப்பவன் பார்ப்பான்; வடிவழகும் அறிவுமுடை யவளே இல்வாழ்க்கைக்குரிய பெண்; சேனையோடு என்றும் மனம் ஒன்றி உடனிருப்பவனே சேனைத்தலைவன் என்று (பெரியோர்) கூறுவர்.

சிறந்தார்க்(கு) அரிய செறுதல்;எஞ் ஞான்றும்
பிறந்தார்க்(கு) அரிய துணைதுறந்து வாழ்தல்;
வரைந்தார்க்(கு) அரிய வகுத்(து)ஊண்;
இரந்தார்க்(கு)ஒன்(று)
இல்என்றல் யார்க்கும் அரிது. 50

இரைசுடும் இன்புறா யாக்கையுள் பட்டால்;
உரைசுடும் ஒண்மை இலாரை;—வரைகொள்ளா
முன்னை ஒருவன் வினைசுடும்; வேந்தனையும்
தன்அடைந்த சேனை சுடும். 51

எள்ளல் பொருள(து) இகழ்தல்; ஒருவனை
உள்ளல் பொருள(து) உறுதிச்சொல்;—உள்அறிந்து
சேர்தல் பொருள(து) அறநெறி; பல்நூலும்
தேர்தல் பொருள(து) பொருள். 52

யாறுள் அடங்கும் குளம்உள; வீறுசால்
மன்னர் விழையும் குடிஉள;—தொல்மரபின்
வேதம் உறுவன பாட்டுஉள; வேளாண்மை
வேள்வியோடு ஒப்ப உள. 53

எருதுடையான் வேளாளன்; ஏலாதான் பார்ப்பான்
ஒருதொடையான் வெல்வது கோழி;—உருவோ(டு)
அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண்என்ப; சேனைச்
செறிவுடையான் சேனா பதி. 54

55. யானைப் படைத் தலைவர் (போர்க் களத்தில்) யானைகளின் சினம் கண்டு மகிழ்ச்சி அடைவர்; அரசர் விரைந்தோடும் குதிரையை விரும்பி அதன்மேல் ஏறிச் செலுத்துவர்; வளைவான காதணி அணிந்த அழகுடைய மகளிரின் நாணத்தைக் கண்டு நல்லியல்புடையவர் மகிழ்ச்சி அடைவர்; நாணமில்லாப் பெண்டிரைத் தீயோர் விரும்புவது கேடு தருவதாகும்.

56. ஒருவனுக்குக் கண்ணைக் காட்டிலும் மேம்பட்ட உறுப்பு வேறு இல்லை; மனைவிக்குத் தன் கணவனைவிட நெருங்கிய உறவினர் பிறர் இல்லை; பெற்றோர்க்கு நன்மக்களைப் போல நன்மை நெறியமைந்த செல்வம் இல்லை; (யாவர்க்கும்) பெற்றெடுத்த தாய்க்கு நிகராகக் கருதத்தக்க கடவுளும் இல்லை.

57. கல்வியறிவுடையவர்களை விரும்பிச் சேர்பவர் அக்கல்வி அறிவுடையவர்களுக்கு ஒப்பாவர்; கண்ணோட்டமில்லாதவர் பகைவரோடு ஒப்பாவர்; தெளிவாக உண்மையைச் சொல்லாதவர் பகைவர்க்கு ஒப்பாவர்; கீழ்மக்கள் உள்ளே மறைந்து பாம்பு வாழுகின்ற புற்றுக்கு ஒப்பாவர்.

58. அறிவால் மாட்சிமைப்பட்டவர்கள் மாட்சிமைப் பட்ட செய்கைகளைச் செய்யும் திறத்தவர் ஆவர்; அவ்வறிவு மாட்சியை வேண்டாதார் தம்மால் விரும்பப்படாத தீவினைப் பயன்களையே அடைவர்; எக்காலும் மக்கட் பிறப்பில் பிறப்பாரெல்லாரும் அறத்தையே விரும்புவர்; வீட்டுலகை விரும்புபவர் 'யான் எனது' என்னும் பற்றைத் துறப்பர்.

59. விண்மீன்களும், தண்ணிலவும், வெங்கதிரும் என்றும் உள்ளனவேயாம்; பிணியும் தொழிலும் என்றும் உள்ளனவாயுள்ளன; ஈவாரும் ஏற்பாரும் எக்காலத்திலும் இருந்து வருகின்றனர்; பிறப்போரும் இறப்போரும் எக்காலத்தும் இருக்கவே செய்வர்; (இதனால் உலகின் இடையறாமையை உணர்விராக).

யானை உடையார் கதன்உவப்பர்; மன்னர்
கடும்பரிமாக் காதலித்து ஊர்வர்;—கொடுங்குழை
நல்லாரை நல்லவர் நாண்உவப்பர்; அல்லாரை
அல்லார் உவப்பது கேடு. 55

கண்ணில் சிறந்த உறுப்புஇல்லை; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருள்இல்லை: ஈன்றாளோ(டு)
எண்ணக் கடவுளும் இல். 56

கற்றன்னர் கற்றாரைக் காதலர்; கண்ணோடார்
செற்றன்னர்; செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றென
உற்ற(து) உரையாதார்; உள்கரந்து பாம்புறையும்
புற்றுஅன்னர் புல்அறிவி னார். 57

மாண்டவர் மாண்ட வினைபெறுப; வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே;—யாண்டும்
பிறப்பார் பிறப்பார் அறன்இன் புறுவர்;
துறப்பார் துறக்கத் தவர். 58

என்றும் உளவாகும் நாளும் இருசுடரும்;
என்றும் பிணியும் தொழில்ஒக்கும்;—என்றும்
கொடுப்பாரும் கொள்வாரும் அன்னர்; பிறப்பாரும்
சாவாரும் என்றும் உளர். 59

60. ஒருயிரையும் கொல்லாது உண்பவனே நல் லுணவை உண்பவன் என்று சொல்லப்படுவான்; முகமலர்ச்சி இல்லாமல் (சிடுமூஞ்சியாய் இருந்து) வாழ்பவன் எல்லா ராலும் வெறுக்கத்தக்கவன் என்று சொல்லப்படுவான்; பிறர்க்கு உதவி செய்தல் இல்லாதவன் துணையில்லாதவன் என்று சொல்லப்படுவான்; எவராலும் வெறுக்கப்படாத ஒழுக்கத்தையுடையவன் இனிமையானவன் என்று சொல்லப் படுவான்.

61. பிறர்க்குக் கொடுத்து உண்பவன் உலகில் புகழை நிலை .நிறுத்துபவன் என்று சொல்லப்படுவான்; பிறன் கைப்பொருளைப் பறித்து உண்பவன் பேராசைக்காரன் என்று சொல்லப்படுவான்; ஒருவன் பகைவர் நட்பை விரும்பிச் செல்லுதல் பிறர் அவனை அவமதித்து எள்ளி நகையாட.லுக்கு ஏதுவாகும்; தன் தகுதி அறியாதவனிடம் ஒருவன் ஒன்றை இரந்து செல்லுதல் பகையை உண்டாக்கும்.

62. நெய்யை ஊற்ற நெருப்பின் சுடர் வளரும்; சரண் அடைந்து துதிக்கத் தேவர் வரம் கொடுப்பர்; பட்டியைத் திறந்து கன்றுகளை உண்பிக்கப் பசுக்களின் பால் பெருகும்; இலையில் பல்வேறு பண்டங்களைப் பரிமாறி இனிதாக உண்பிக்க விருந்தினர் மகிழ்ச்சிப் பெருக்கடைவர்.

63. தான் பழிக்கப்படுதல் இல்லாமையைத் தன் நன் மக்கட்பேற்றால் அறிந்து கொள்க; ஒருவன் தனக்கு நண்பு அல்லாமையைத் தனக்குப் பொருள் அழிவு நேரும்போது அறிந்து கொள்க; ஒருவனுடைய வளர்ச்சியை (அவனிடம்) பொருள் வந்து சேரும் முறைமையால் அறிந்து கொள்க; பலரும் புகழும் புகழ்ச்சியால் ஒருவன் பகைவராலும் பாராட்டப்படுவான்.

64. (பொதுவாகக்) கண்களை ஆராயின் பிறரால் விரும்பப்படும் (கண்ணோட்டமுடைய) கண்களும் உள்ளன; பெண்களுக்குள்ளே அழகிய உருவமில்லாதிருந்தும் மாட்சி மைப்பட்ட இயல்பினையுடையார் உண்டு; ஒரு நாட்டின் ஒரு பகுதியிலேனும் வளம் மிக்க நல்ல ஊர்கள் உள்ளன; பாட்டுக்கள் பலவற்றுள்ளும் தனித்துப் பெருமை பெறும் பாட்டுக்களும் உள்ளன.

இனிதுண்பான் என்பான் உயிர்கொல்லா(து) உண்பான்;
முனிதக்கான் என்பான் முகன்ஒழிந்து வாழ்வான்;
தனியன் எனப்படுவான் செய்தநன்றுு இல்லான்;
இனியன் எனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா ஒழுக்கத் தவன். 60

ஈத்துஉண்பான் என்பான் இசைநடுவான்; மற்றவன்
கைத்துஉண்பான் காங்கி எனப்படுவான்; தெற்ற
நகையாகும் நண்ணார்முன் சேறல்; பகைஆகும்
பா(டு)அறியா தானை இரவு. 61

நெய்விதிர்ப்ப நந்தும் நெருப்புஅழல்; சேர்ந்து
வழுத்த வரம்கொடுப்பர் நாகர்—தொழுத்திறந்து
கன்றுஊட்ட நந்தும் கறவை; கலம்பரப்பி
நன்றுஊட்ட நந்தும் விருந்து. 62

பழிஇன்மை மக்களால் காண்க; ஒருவன்
கெழிஇன்மை கேட்டால் அறிக; பொருளின்
நிகழ்ச்சியால் ஆக்கம் அறிக; புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும். 63

கண்ணுள்ளும் காண்புழிக் காதற்றும்; பெண்ணின்
உருஇன்றி மாண்ட உளவாம்—ஒருவழி
நாட்டுள்ளும் நல்ல பதிஉள;—பாட்டுள்ளும்
பாடுஎய்தும் பாட்டே உள. 64

65. (விளக்குத்) திரியில் எரிகின்ற சுடரைக் கண்டால் அஃது உருவில் சிறிதாயினும் (உலகத்தார்) மதித்து வணங்குவர்; விறகில் எரிகின்ற சுடரைக் கண்டால் (அது பேரொளி செய்யினும் வணங்காது) விடுவர்; (அதுபோல) ஒரே குடும்பத்தில் பிறந்தபோதிலும் கல்வியின்றி வயதால் மூத்தவனை விட்டுவிட்டு வயதில் இளையவனாயினும் கற்றவனையே உலகத்தார் மதித்துப் போற்றுவர்.

66. கைப் பொருளுடையானுக்கு அவன் விரும்பியது கிடைத்துவிடும்; விதைமுளைகள் நீர் பாய்ந்தால் முளைத்து விடும்; அழகிய திருமகள் பரிவுகாட்டினால் பெருஞ்செல்வம் குவியும்; அத்திருமகள் பரிவுகாட்டாது துன்பம் செய்வா ளானால் உள்ள செல்வமும் அழிந்து போகும்.

67. ஊன் உணவை உண்டு புலி உடலை வளர்க்கும்; நீர்வளமுள்ள நிலத்தில் வளர்ந்த பசும் புல்லை உண்டு பசுக்கூட்டம் இன்பமடையும்; கீழ்மக்கள் எல்லாம் நெல்லரிசிச் சோற்றை உண்டு மகிழ்வர்; மேன்மக்களோ தத்தம் சிறப்பான செயல்களால் இன்பமடைவர்.

68. செய்யும் செயலை முன் ஆராயாதவர்க்கு அச் செயலைத் தொடங்கியபின் நடுங்கச் செய்யும் துன்பங்கள் தோன்றத் தொடங்கும்; என்ன பயனைத் தருவதாயிருந் தாலும் தொடங்கும் முன்னர் ஆராய்பவர்க்கு அப் பயன்கள் முன்னதாகவே தெரிந்துவிடும்; ஏதேனும் ஒரு பொருளை விரும்பி அடைந்தவரது உள்ளம் அதன்மேல் மேன்மேலும் அவாவுடையதாய் இருக்கும்; எப்பொருளிலும் பற்று இல்லாதவர்கள் செய்யும் செயல்கள் குற்றமற்றவை யாய் இருக்கும்.

69. கையில் பொருள் உண்டாயிருக்க (அப்பொருளா லாகும் பயனை அடையாமல்) அதை வறிதே காப்பவரை விடக் கையில் பொருள் இல்லாதவர் நல்லவர்; அப்பொருளை ஈயாது வைத்திருப்பவரைவிட வறியவர் நல்லவர்; வெகுண் டெழுந்து வைதவர்களைவிட அவ்வசவைப் பொறுத்திருப் பவர் நல்லவர்; ஒன்றைச் செய்தவரைவிடச் செய்தவற்றை அழிக்காதிருப்பவர் நல்லவர்.

திரிஅழல் காணில் தொழுப; விறகின்
எரிஅழல் காணில் இகழ்ப;—ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டும் உலகு. 65

கைத்(து)உடையான் காமுற்ற(து) உண்டாகும்; வித்தின்
முளைக்குழாம் நீர்உண்டேல் உண்டாம்; திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துஉறின் உண்டாகும்; மற்றுஅவள்
துன்புறுவாள் ஆகின் கெடும். 66

ஊன்உண்(டு) உழுவை நிறம்பெறூஉம்; நீர்நிலத்துப்
புல்லினுல் இன்புறூஉம் காலேயம்:—நெல்லின்
அரிசியால் இன்புறூஉம் கீழ்எல்லாம்; தத்தம்
வரிசையால் இன்புறூஉம் மேல். 67

பின்னஆம் பின்அதிர்க்கும் செய்வினை;—என்பெறினும்
முன்னஆம் முன்னம் அறிந்தார்கட்(கு);— என்னும்
அவாஆம் அடைந்தார்கட்(கு) உள்ளம்;—தவாஆம்
அவாஇலார் செய்யும் வினை. 68

கைத்துஇல்லார் நல்லவர் கைத்துஉண் டாய்க் காப்பாரின்;
வைத்தாரின் நல்லர் வறியவர்;—பைத்(து)எழுந்து
வைதாரின் நல்லர் பொறுப்பவர்;—செய்தாரின்
நல்லர் சிதையா தவர். 69

70. தந்தையின் தன்மையை மகனது குணம் பிறர்க்கு அறிவித்துவிடும்; ஒருவனுடைய உள்ளக் கிடக்கையை அவனுடைய முகம் காட்டிவிடும்; அகன்ற நீர் நிலையின் இயல்பை அதனில் மூழ்கி எழுந்தவன் அறிவித்து நிற்பான்; நிலத்தின் தன்மையை மழை (பெய்தும், பெய்யாமலும்) காட்டி நிற்கும்.

71. பலரும் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தால் ஊர் சிறப்படையும்; குற்றமில்லாமல் கற்கத்தகுந்த நூல்களை ஐயமறக் கற்றால் ஒருவனுடைய அறிவுச் சிறப்புமிகும்; கூரிய கொம்புகளையுடைய பொலிகாளையால் பசுக்கூட்டம் சிறந்து பெருகும்; பிறர்க்குக் கொடுக்கும் கொடையால் தான் பிறந்த குடி சிறப்பினை எய்தும்.

72. கடிவாளம் பூட்டிய குதிரைகள் அவற்றை ஏறிச் செலுத்துவோனுடைய திறமையைப் பொறுத்து விரைந்து செல்லும்; அறச்செய்கை அதனைச் செய்யத் தலைப்பட்டவனுடைய ஆற்றலைப் பொறுத்து நிறைவுறும்; நீர்க்காலின் வாயகலம் தோண்டப்பட்ட குளத்தின் அளவைப் பொறுத்து அமையும்; மனைவாழ்வார் செயல்கள் அவரவர் வருவாயைப் பொறுத்து நடைபெறும்.

73. ஊழிக்காலம் ஆண்டுகளாகக் கணக்கிடப்பட்டு அளவு செய்யப்படுகிறது. யாமக் காலம் நாழிகைகளாகக் கணக்கிடப்பட்டுக் கழிகின்றது; அறிவுடையோர், அறிவுடையோரை வழிபட்டுக் காலம் நீட்டியாது ஐயம் தெளிகின்றனர். அறிவில்லார் பிறர்க்கு இன்னாதன செய்யும் கொடுமையான சொற்களைச் சொல்லியே இன்புறுகின்றனர்.

74. கல்வியறிவுடையான் ஒருகாலத்தில் தளர்ச்சி அடைவானாயினும் (அத்தளர்ச்சியினின்றும் நீங்கி) மீண்டும் பழைய நிலையை அடைவான்; கல்வியறிவில்லாத மூடன் தன்னிலையினின்றும் தளருவானேயானால் கால் முரிந்தாற் போல மறுபடி அதினின்றும் மீண்டு எழமாட்டான்; ஒருவன் ஒருபிறப்பில் செய்தன எல்லாம் மறுமை நுகர்ச்சிக்குக் காரணங்களாக அமைகின்றன; ஆராய்ந்து பார்த்தால் மெய்யுணர்வு விடுபேற்றுக்கு உண்மையான காரணமாகிறது.

மகன்உரைக்கும் தந்தை நலத்தை; ஒருவன்
முகன்உரைக்கும் உள்நின்ற வேட்கை;—அகல்நீர்ப்
பிலத்(து)இயல்பு புக்கான் உரைக்கும்; நிலத்(து)இயல்பு
வானம் உரைத்து விடும். 70

பதிநன்று பல்லார் உறையின்; ஒருவன்
மதிநன்று மாசுஅறக் கற்பின்;—நுதிமருப்பின்
ஏற்றால்வீ(று) எய்தும் இனநிரை; தான்கொடுக்கும்
சோற்றால்வீ(று) எய்தும் குடி. 71

ஊர்ந்தான் வகைய கவினமா;—நேர்ந்(து)ஒருவன்
ஆற்றல் வகைய அறம்செய்கை; தொட்ட
குளத்துஅனைய தூம்பின் அகலங்கள்; தத்தம்
வளத்(து)அனைய வாழ்வார் வழக்கு. 72

ஊழியும் யாண்டுஎண்ணி யாத்தன; யாமமும்
நாழிகை யானே நடந்தன;—தாழியாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர்; வெட்கென்றார்
வெஞ்சொலால் இன்புறு வார். 73

கற்றான் தளரின் எழுந்திருக்கும்; கல்லாத
பேதையான் வீழ்வானேல் கால்முரியும்; எல்லாம்
ஒருமைத்தான் செய்த கருவி; தெரிவுஎண்ணின்
பொய்யாவித்(து) ஆகி விடும் 74

75. புலமையுடையார் தேவர்களை ஒப்பர்; அப் புலவர்கள் வாழும் ஊரில் வாழ்பவர்கள் தேவர்களின் உறவினரை ஒப்பவராவர்; அவ்வாறு (உறவினராக) வாழ் பவருள்ளும் அப்புலவர்களைப் போற்றி வழிபடுபவர்கள் தேவர்களின் அருள்பெற்றோரை ஒப்பர்; (ஆனால்) அப் புலவர்கள்மாட்டு மிக்க அன்புடையவர்களோ அப்புலவர் களை ஒப்பக் கற்றவர் ஆவர். (அதனால் அவர்களும் தேவர் களாவர்).

76. (நட்புகொண்ட இருவரில் ஒருவனிடத்தில்) பொய் முளைத்தபோதே நட்புக் கெட்டொழியும்; மருத்துவன் ‘சொல்’ என்றபோதே நோயாளி தன் நோயைத் தெரிவித் திடுக; நல்லோர் ‘தீச்செயலை விடுக’ என்றபோதே அவற்றை விட்டிடுக; சொத்துக்கு உரிமை உடையவன் ‘தருக’ என்றபோதே அவன் பங்கைப் பிரித்துத் தந்திடுக.

77. சுவைகளை நாக்கினால் (சுவைத்து) அறியலாம்; எல்லா மலர்களின் மணத்தையும் மூக்கினால் நுகர்ந்து அறியலாம்; அண்மையில் உள்ள பொருள்களை வறிதே காணும் தொழிலமைந்த (வெளிப்பார்வை உடைய) கண்களால் கண்டு அறியலாம். (கண்களால் காணமுடியாத அறிவுணர்ச்சிப் பொருள்களை) அறிஞர்கள் பலரோடு கூடியிருந்து அறிவினால் ஆராய்ந்து தெளியவேண்டும்.

78. பிறந்த உயிர்களுள் இறவாதிருப்பது எதுவும் இல்லை; வலிமைகளுள் கெடாதது எதுவும் இல்லை; முதுமையடையாது இளமையோடு நிலையாகப் பொருந்தி யிருப்பவர் இல்லை; செல்வச் செழிப்பின் இடையே குறைவு இல்லாமல் வாழ்ந்தவரும் இல்லை.

79. ஒருவனுடைய (தன்மையை) அவனுடைய வாய்ச் சொல்லால் அறியலாம்; மடுவினது தன்மையை அதன் தெளிந்த நீரால் அறியலாம்; சான்றாண்மைப் பண்பை எவரிடத்திலும் ஒப்ப நடக்கும் உலக நடையினால் அறியலாம்; ஒருவன் கள் குடித்திருப்பதை அவனுடைய உடம்பில் உண்டாகும் (தடுமாற்றம் போன்ற) மெய்ப் பாடுகளால் அறியலாம்.

தேவர் அனையர் புலவரும்: தேவர்
தமர்அனையர் ஓர்ஊர் உறைவார்;—தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார்; கற்றன்னர்
கற்றாரைக் காத லவர். 75

தூர்ந்துஒழியும் பொய்பிறந்த போழ்தே; மருத்துவன்
சொல்கஎன்ற போழ்தே பிணிஉரைக்கும்;—நல்லார்
விடுகஎன்ற போழ்தே விடுக; உரியான்
தருகஎனின் தாயம் வகுத்து. 76

நாக்கின் அறிப இனியவை; மூக்கினால்
மோந்(து)அறிப எல்லா மலர்களும்; நோக்குள்ளும்
கண்ணினால் காண்ப அணியவற்றை; தொக்குஇருந்து
எண்ணினான் எண்ணப் படும். 77

சாவாத இல்லை பிறந்த உயிர்எல்லாம்;
தாவாத இல்லை வலிகளும்;—மூவா(து)
இளமை இசைந்தாரும் இல்லை;—வளமையில்
கேடுஇன்றிச் சென்றாரும் இல். 78

சொல்லால் அறிப ஒருவனை;—மெல்லென்ற
நீரால் அறிப மடுவினை—யார்கண்ணும்
ஒப்புரவி னால்அறிப சான்றாண்மை;—மெய்க்கண்
மகிழான் அறிப நறா. 79

80. (எண்ணிப்பாராது பேசும்) நாக்கு நட்பினை நீங்கச் செய்யுமன்றோ? (ஆதலால் அதனைப் பாதுகாக்க); தெளிவில்லாத பேதையை மிகுதியும் கட்டாயப்படுத்தினால் தன்னிடம் உள்ள நற்செயலையும் கைவிடும் அன்றோ? பலநூல்களையும் கற்றுத் தெளிந்த அறிவுவலையில் அகப்பட்ட ஆசை கெட்டழியும் அன்றோ? பகைமைக்குள் தன்னை நிறுத்தும் துணிவு ஒருவனைக் கெடுத்துவிடும் அன்றோ?

81. ஒருவர்க்கு ஒன்றைக் கொடுப்பதானால் உணவு கொடுக்க; ஏதாவதொன்றை விட்டுவிடுவதானால் உயிரின் மீதுள்ள பற்றை விட்டுவிடுக; பிறரைத் தாங்கிப் பாது காப்பதாயிருந்தால் தன் சுற்றத்தாருள் ஏழ்மைப் பட்ட வரைத் தாங்கிப் பாதுகாக்க; ஏதாவதொன்றைக் கெடுப் பதாயிருந்தால் வெகுளியைக் கெடுத்து விடுக.

82. அழகுத் தன்மையும் இளமை இயல்பும் வறுமை உற்றபோது ஒருங்கு அழியும்; குலப் பெருமையும் குடிப் பிறப்பின் சிறப்பும் கல்லாமையால் நில்லாது அழியும்; நீர் வருவாய் அற்ற குளத்தின்கீழ் வளரும் நெற்பயிர் கருகி அழியும்; சுமக்க முடியாத சுமையின்கீழ் எருதுகள் உயிர் அழியும்.

83. கற்றறிந்த நல்லவர்க்குச் சொந்த ஊர் என்று ஒன்று இல்லை (அவர்க்கு யாதும் ஊரேயாம்); நல்வழியில் நடப்பவர்களுக்கும் சொந்தஊர் என்று ஒன்று இல்லை (எவ்வூரும் அவர் ஊரே); நல்வழியில் நடக்காத கீழ்மக் களுக்கும் சொந்த ஊர் என்று ஒன்று இல்லை (எந்த ஊரிலும் அவர்கள் நிலைத்திருக்க மாட்டார்கள்); தம்கையில் பொருள் உடையவர்களுக்கு எந்த ஊரும் சொந்த ஊரே (எங்கும் அவர் செல்வாக்குச் சிறக்கும்).

84. கல்வி அறிவில்லாத ஒருவனுக்கு அவன் வாயி லிருந்து பிறக்கும் சொற்களே அழிவைத் தரும்; மென்மையான இலைகளையுடைய வாழை மரத்துக்கு அம் மரத்தில் தோன்றும் தாறே அழிவைத் தரும்; பாவச் செயல் களைச் செய்வார்க்கு அறமே அழிவைத் தரும்; இல்லத்தி லிருந்து தீதாக ஒழுகும் மனைவி தன் கணவனுக்கு அழிவையே தருவாள்.

நாஅன்றோ நட்(பு)அறுக்கும்; தேற்றம்இல் பேதை
விடும்அன்றோ வீங்கிப் பிணிப்பின்; அவாஅப்
படும்அன்றோ பன்னூல் வலையில்; கெடும்அன்றோ
மாறுள் நிறுக்கும் துணிபு. 80

கொடுப்பின் அசனம் கொடுக்க;—விடுப்பின்
உயிர்இடை யீட்டை விடுக்க; எடுப்பின்
கிளையுள் கழிந்தார் எடுக்க; கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல். 81

நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம்;
குலனும் குடிமையும் கல்லாமைக் கீழ்ச்சாம்;
வளம்இல் குளத்தின்கீழ் நெல்சாம்; பரமல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு. 82

நல்லார்க்குத் தம்ஊர்என்(று) ஊர்இல்லை; நன்னெறிச்
செல்வார்க்கும் தம்ஊர்என்(று) ஊர்இல்லை; - அல்லாக்
கடைகட்கும் தம்ஊர்என்(று) ஊர்இல்லை; தம்கைத்(து)
உடையார்க்கும் எவ்வூரும் ஊர். 83

கல்லா ஒருவர்க்குத் தம்வாயில் சொல்கூற்றம்;
மெல்இலை வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம்;
அல்லவை செய்வார்க்கு அறம்கூற்றம்; கூற்றமே
இல்லத்துத் தீங்(கு)ஒழுகு வாள். 84

85. நீர்ப் பாய்ச்சலால் விளைநிலம் சிறப்பான விளைவைத் தரும். கடல் தரும் (முத்து, பவளம் போன்ற பல்வேறு) பொருள்களால் நகரம் சிறப்படையும்; தாம் அரசாளும் நாட்டினால் மன்னர் சிறப்படைவர்; ஒருவனுடைய ஆடும் திறத்தினால் கூத்துச் சிறப்படையும்.

86. பெண்களுக்குப் பெருமை தருவது ஒன்றுபட்ட மனத்தோடு கணவன் வழியில் முயன்று ஒழுகுதலாகும்; எக்காலத்தும் அந்தணர்க்குப் பெருமை தருவது அற நினைவை மன எழுச்சியோடு சொல்லி வருதலாகும்; அரசாட்சிக்குப் பெருமை தருவது பிறர் ஆளும் (பகைவனால் ஆளப்படும்) நாட்டை வெற்றி கொள்ள ஊக்கத்தோடு எழுதலாகும்; ஒருவனுடைய கேட்டுக்கு ஆக்கம் தருவது சுற்றத்தாரை நீக்கி விடுதலாகும்.

87. கொடிய துன்பங்கள் பிறகு வந்து சேரும் என்ப தால் பிறர் பொருளைத் திருடாமை வேண்டும்; ஒழுக்கங் களை (எவ்வகையாலும்) நீக்காமை வேண்டும்; கீழ்மக்களு டன் (எந்நிலையிலும்) நட்புக் கொள்ளாமை வேண்டும்; எவ்வகையாரிடத்தும் (எப்பொழுதும்) பகை கொள்ளாமை வேண்டும்.

88. தனக்கு நண்பராயினாரை நன்மையான செயல் களில் ஈடுபடுத்தி உயர்த்துக; தன்நெஞ்சோடு ஒட்டாத பகைவரை வெல்வதற்கு ஏற்ற காலம் அறிந்து வெல்லுக; எவ்வகையாரிடத்தும் சென்று உண்ணுதலைத் தவிர்க்க; செல்லத்தகாத இடத்தில் சினத்தினைச் சுருக்கிக் கொள்க.

89. கெடுவாரிடத்துச் சோம்பல் நிலைபெறும்; காக்க வேண்டிய கல்வி ஒழுக்கம் முதலியவற்றைக் காத்தல் செய்யாத பேதையரிடம் தீமை நிலைத்துவிடும். நன்மகளிர் நாணக் கட்டுப்பாட்டுள் நிற்பர்; பாகன் தன் காலின் அருகே பற்றுக்கோடாக நட்டு வைத்த சிறு குச்சிக்கு யானை கட்டுப் பட்டு நிற்கும்.

நீரால்வீ(று) எய்தும் விளைநிலம்; நீர்வழங்கும்
பண்டத்தால் பாடுஎய்தும் பட்டினம்;—கொண்டுஆளும்
நாட்டால்வீ(று) எய்துவர் மன்னவர்; கூத்(து)ஒருவன்
ஆடலால் பாடு பெறும். 85

ஒன்றுஊக்கல் பெண்டிர் தொழில்நலம்;—என்றும்
நன்றுஊக்கல் அந்தணர் உள்ளம்; பிறன்ஆளும்
நாடுஊக்கல் மன்னர் தொழில்நலம்; கேடுஊக்கல்
கேளிர் ஒரீஇ விடல். 86

கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்;
தள்ளாமை வேண்டும் தகுதி உடையன;
நள்ளாமை வேண்டும் சிறியரோடு; யார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை 87

பெருக்குக நட்டாரை நன்றின்பால் உய்த்து;
தருக்குக ஒட்டாரைக் காலம் அறிந்து; ஆங்கு
அருக்குக யார்மாட்டும் உண்டி; சுருக்குக
செல்லா இடத்துச் சினம். 88

மடிமை கெடுவார்கண் நிற்கும்; கொடுமைதான்
பேணாமை செய்வார்கண் நிற்குமாம்; பேணிய
நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர்; நட்(டு)அமைந்த
தூணின்கண் நிற்கும் களிறு. 89

90. அந்தணராய புலவர் என்றும் மறைநூலை ஆராய்வர்; அரசர்கள் நீதி முறையையும் பகைவரை வெற்றி கொள்வதையும் ஆராய்வர்; எஞ்ஞான்றும் எல்லார்க்கும் பணிவுடையராய் இருத்தல் அறிவுநிறை சான்றோர்க்கு அணிகலம் ஆகும்; தன் கணவனையன்றிப் பிற தெய்வங்களைப் பெண்மக்கள் வணங்குதல் இல்லை.

91. நற்பண்புகளை உடைய பெண் பெண்டிர்க்கு வகுத்துள்ள கற்பு நெறிப்படியே ஒழுகுவாள்; கணவனோடு மனம் பொருந்துதல் இல்லாதவள் காவல் செய்தாலும் தான் விரும்பியவாறே நடப்பாள்; காமும் இடையூறு நேரினும் முன் நிகழ்ந்தபடியே நிகழும்; எவ்வளவு மறைத்தாலும் கொலைப்பழி கொலை செய்தவனையே சென்று சேரும்.

92. ஒருவர்க்கு வீரம் மிகுந்தால் வலிமை பெருகும்; பால்போலும் இனிய மொழியினையுடைய மனைவியிடம் (கடுகடுத்து நோக்குதல் இல்லாத) இனிய கண்ணோட்டம் பெருகினால் சுற்றம் நிறையும்; சிறப்புப் பொருந்திய அருள் பெருகினால் அறச் செயல்கள் மிகும்; கொடுமையுடைய கீழ்மைத்தன்மை பெருகினால் பாவச் செயல்கள் மிகுந்து பெருகும்.

93. (கல்வி கற்க வேண்டிய) இளமைப் பருவத்தில் கற்காமல் விடுதல் குற்றம்; பொருள் வளம் இல்லாத காலத்தில் ஈகைக் குணம்உடைமை குற்றம்; உறவுக் கட்டு (சுற்றத்தார் துணை) இல்லாதபோது பகைவர்மேல் சினம் கொள்ளுதல் குற்றம்; உள்ளன்பில்லாதவர் மாட்டு உணவைப் பெற்று உண்ணுதல் குற்றம்.

94. (எதனைக் கருதிச் செய்தாலும்)எங்கும் ஒருயிரைக் கொல்லுதல் தீது; பெற்றெடுத்த மக்களைக் கல்வி கற்காமல் வளர விடுதல் தீது; நாணம் இல்லாமல் நடந்துகொள்ளும் பெண்களின் அழகு தீது; ஒழுக்கந் தவறிவிட்டால் குலமே தீதாம்.

மறைஅறிப அந்தண் புலவர்; முறையொடு
வென்றி அறிப அரசர்கள்;—என்றும்
வணங்கல் அணிகலம் சான்றோர்க்கு; அஃதுஅன்றி
அணங்கல் வணங்கின்று பெண். 90

பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள்; காப்பினும்
பெட்டாங்(கு) ஒழுகும் பிணைஇலி;—முட்டினும்
சென்றாங்கே சென்(று)ஒழுகும் காமம்; சுரப்பினும்
கொன்றான்மேல் நிற்கும் கொலை. 91

வன்கண் பெருகின் வலிபெருகும்; பால்மொழியார்
இன்கண் பெருகின் இனம்பெருகும்; சீர்சான்ற
மென்கண் பெருகின் அறம்பெருகும்; வன்கண்
கயம்பெருகின் பாவம் பெரிது. 92

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்;
கிளைஞர்இல் போழ்தில் சினம்குற்றம்; குற்றம்
தமர்அல்லார் கையகத்து ஊண். 93

எல்லா இடத்தும் கொலைதீது; மக்களைக்
கல்லா வளர விடல்தீது;—நல்லார்
நலம்தீது நாண்அற்று நிற்பின்; குலம்தீது
கொள்கை அழிந்தக் கடை. 94

95. நல்லொழுக்கம் என்பது கற்றலால் அமையும் கல்வி; செல்வப் பயன் அறவழியோடு சேர்ந்த இன்ப நுகர்ச்சி பெறுதல்; யாரிடத்திலும் (நடுநிலை தவறிய) கண்ணோட்டம் இல்லாதிருத்தல் அரசாளும் முறைமை ஆகும்; ஆளும் முறை தெரிந்து அரசாள்பவன் தன்மனத்தால் ஆராயாது ஒன்றனையும் செய்தல் இல்லை.

96. கள்ளைப் பெறாமையால் நேரும் துன்பத்தைக் கட்குடியன் அறிவான்; நீர் பெறாமையால் நேரும் துன்பத்தை வானம்பாடி அறியும்; பொருளைத் தேடும் துன்பத்தைப் பல மனைவிகளை உடையவன் அறிவான்; ஒன்றை ஒளித்து வைக்க நேரும் துன்பத்தைத் திருடன் அறிவான்.

97. நற்குணங்கள் இல்லாதவர் வாயில் பழிச் சொற்கள் தோன்றும்; அற நூல்களைக் கற்றவர் வாயில் அவர்கள் கெடுவதாயிருந்தாலும் வஞ்சனைச் சொற்கள் தோன்றா; சான்றோர் வாயில் தீச் சொற்கள் தோன்றா; கீழ்மக்கள் வாயில் இரந்தார்க்கு இல்லையென்று சொல்லும் மறைப்புச் சொல் தோன்றும்.

98. ஒள்ளிய நகைகளை அணிந்த அழகிய பெண்கள் முன் அழகு இல்லாதவர் பெருமை இல்லாதவராவர்; கற்றார் அவையில் கல்லாதவன் பெருமை இல்லாதவனாவான்; கல்வி அறிவுடைய ஒருவன் கல்வி இல்லாரிடத்துச் சேர்ந்தாலும், பேதையரிடத்தில் சேர்ந்தாலும் பெருமை பெறுவது இல்லை.

99. அழுக்குப்பட்டாலும் மணி தன் பெருமையில் குறையாது; மேற்பூச்சுப் பூசினாலும் இரும்பினிடத்தில் துரு ஆகிய மாசு ஏறும்; தளை முதலாயினவற்றுள் இட்டு ஒறுத்தாலும், அல்லது அறிவு கொளுத்தினாலும் கீழ்மகன் தன் கீழ்மைக்குணத்தையே காட்டி நிற்பான்.

ஆசாரம் என்பது கல்வி; அறம்சேர்ந்த
போகம் உடைமை பொருள்ஆட்சி; யார்கண்ணும்
கண்ணோட்டம் இன்மை முறைமை; தெரிந்துஆள்வான்
உள்நாட்டம் இன்மையும் இல். 95

கள்ளின் இடும்பை களிஅறியும்; நீர்இடும்பை
புள்ளினுள் ஓங்கல் அறியும்; நிரப்(பு)இடும்பை
பல்பெண்டிர் ஆளன் அறியும்; கரப்(பு)இடும்பை
கள்வன் அறிந்து விடும். 96

வடுச்சொல் நயம்இல்லார் வாய்த்தோன்றும்; கற்றார்வாய்ச்
சாயினும் தோன்றாக் கரப்புச்சொல்;—தீய
பரப்புச்சொல் சான்றோர்வாய்த் தோன்றா; கரப்புச்சொல்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும். 97

வால்இழையார் முன்னர் வனப்புஇலார் பாடுஇலர்;
சாலும் அவைப்படில் கல்லாதான் பாடுஇலன்;
கற்றான் ஒருவனும் பா(டு)இலனே, கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின். 98

மாசு படினும் மணிதன்சீர் குன்றாதாம்;
பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசுஒட்டும்;
பாசத்துள் இட்டு, விளக்கினும் கீழ்தன்னை
மாசுஉடைமை காட்டி விடும். 99

100. சான்றோரை நெடுநாள் பழகியவரைப் போன்று நீங்காதிருத்தல் அறிவுடைமையாகும்; தம்மைப் போற்றாத பகைவரொடு கூடி வாழ்தல் புண்போலத் துன்பம் செய் வதாகும்; நண்பர்கள் சொல்லும் இடித்துரை நரம்புக் கட்டமைந்த யாழ் இசையைப்போல இன்பந்தருவதாகும்; நற்பண்புகள் பொருந்திய மனைவியை இல்லாத வீடு பாழ் மனையை ஒத்ததாகும்.

101. ஏரியின் கரை சிறியதானால் நீர் வழிந்தோடி விடும்; இல்லத்தின் பொருள் வருவாய் குறையுமானால் மனையாள் கொழுநனை மதியாது பேசுவாள்; முன்நாட் களில் செய்த நல்வினை குறையுமானால் தீவினை சேர்ந்து பெருகும்; வலிமை குறையுமானால் பகைவர்கள் மிகுந்து விடுவர்.

102. கொன்று தின்பதற்காகப் பிற உயிர்களை வளர்த்தலும் குற்றம்; (அங்ஙனம் தாமே கொல்லாமல்) ஊனை விலைக்கு வாங்கி உண்ணுதலும் குற்றம்: சொல்லத் தகுதியில்லாத சொற்களைச் சொல்லுதலும் குற்றம்; பிற உயிர்களைக் கொலை செய்தலும் குற்றம்.

103. முறையிலாது திட்டுவதால் நிந்தனை பெருகும்; பணிந்து வாழ்வதால் செழுமையான உறவு நிறைந்து பெருகும்; ஈட்டிய பொருளினால் இன்ப வாழ்க்கை மிகுந்து பெருகும்; மனம் நெகிழ்ந்த அருளினால் அறச் செயல்கள் வளர்ந்து பெருகும்.

104. எல்லாம் தெரிந்தவனும் இல்லை; ஒரு சிறிதும் அறியாதவனும் இல்லை; குணம் இல்லாது குற்றமே உள்ளவனும் இல்லை; அறியாமை முற்றிலுமாக நீங்குமாறு கற்றவனும் இல்லை.

எண்ஒக்கும் சான்றோர் மரீஇயாரில் தீராமை;
புண்ஒக்கும் போற்றார் உடன்உறைவு;—பண்ணிய
யாழ்ஒக்கும் நட்டார் கழறும்சொல்; பாழ்ஒக்கும்
பண்புடையாள் இல்லா மனை. 100

ஏரி சிறிதாயின் நீர்ஊரும்; இல்லத்து
வாரி சிறிதாயின் பெண்ஊரும்; மேலைத்
தவம்சிறிது ஆயின் வினைஊரும்; ஊரும்
உரன்சிறிது ஆயின் பகை. 101

அலைப்பான் பிறஉயிரை ஆக்கலும் குற்றம்;
விலைப்பாலில் கொண்(டு)ஊன் மிசைதலும் குற்றம்;
சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்;
கொலைப்பாலும் குற்றமே ஆம். 102

வைததனால் ஆகும் வசையே; வணக்கமது
செய்ததனால் ஆகும் செழுங்கிளை; செய்த
பொருளினால் ஆகுமாம் போகம்; நெகிழ்ந்த
அருளினால் ஆகும் அறம். 103

ஒருவன் அறிவானும் எல்லாம், யாதொன்றும்
ஒருவன் அறியா தவனும், ஒருவன்
குணன்அடங்கக் குற்றம்உ ளானும், ஒருவன்
கணன்அடங்கக் கற்றானும் இல். 104

105. வீட்டுக்கு விளக்கொளி போன்றவர் பெண்கள்; அப் பெண்களுக்கு விளக்கொளி போன்றவர் அறிவார்ந்த மக்கள்; மனத்திற்கு இனிமை செய்யும் அன்பான அம் மக்களுக்கு ஒளி தருவது கல்வி; ஆராயின் கல்விக்கு ஒளி தருவது புகழ் நிறைந்த மெய்யுணர்வே ஆகும்.

106. இனிய சொற்களால் நட்புத் தோன்றும்; இனிமை இல்லாத வன்சொற்களால் குற்றமான வஞ்சக மனம் தோன்றும்; நயமான சொற்களையுடைய நாவினால் அருள் நெஞ்சம் தோன்றும்; அந்த அருள் நெஞ்சத்தால் அழிவில்லாத வீடுபேறு தோன்றிவிடும்.

மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்; மனக்(கு)இனிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதில் புகழ்சால் உணர்வு. 105

இன்சொலான் ஆகும் கிழமை; இனிப்புஇலா
வன்சொலான் ஆகும் வசைமனம்;—மென்சொலின்
நாவினால் ஆகும் அருள்மனம்; அம்மனத்தான்
வீவுஇலா வீடாய் விடும். 106

நான்மணிக் கடிகை

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

நான்மணிக் கடிகை

பொருள் அகரவரிசை